www.tamilarangam.net

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவுசெய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

● வார இதழ் ● இதழ் 350 ● 1985 நவம்பர் 23 சனிக்கிழமை ● விலை 1-00

## இ. தொ. கா. செயற்குழு கூட்டம்:

# அரசாங்கத்திலிருந்து வெளியேறும் தீர்மானத்தை அமுல் செய்ய போராடு!

**டிசம்பர் 31ம் திகதிக்குள் யூ.என்.பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவது என்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொண்டமான் தலைமையின் நிலைப்பாட்டில் எது வித குத்துக்கரணங்களும் இடம் பெறுதிருக்கப் போராடுவது தோட்டத் தொழிலாளர்களின் உடனடிப் பணியாகி யுள்ளது.**

இவ்விடயம் சம்பந்தமாக டிசம்பர் 3ம் திகதி கூடவுள்ள இ.தொ.கா. செயற்குழுக் கூட்டம் அந்த முடிவினை எடுக்கும் விதத்தில் இ.தொ.கா. அங்கத்தவர்களும், தொழிலாள வர்க்கமும் பரந்த பிரச்சாரத்தை தொடுக்க வேண்டும்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் குடியுரிமை பெற அருகதையுள்ளவர்களுக்கு அவ்வுரிமையை மறுத்து, தோட்டங்களில் ஆயுதப் படையினரும் குண்டர்களும் நடாத்தும் தாக்குதல்கள், திடீர், திடீர் என இளைஞர்களை கைது செய்தல், போன்ற சம்பவங்கள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன.

ஹட்டன் பகுதிகளில் இந்தத் தாக்குதல்களுக்கு எதிரான வேலை நிறுத்தங்கள் ஏற்கனவே வெடித்துள்ளதோடு, அவை இ.தொ.கா. மற்றும் தொழிற்சங்கத் தலைமைகளின் கட்டுப்பாட்டையும் மீறி ஏனைய தோட்டங்களுக்கும் பரவத் தொடங்கியுள்ளது.

பெருந்தோட்டப் பொருளாதாரத்தையும் 'புனரமைக்கும்' வேலைகளுக்கென உலக வங்கியும், மற்றும் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களும் 570 கோடி ரூபாவை யூ.என்.பி. அரசாங்கத்துக்குக் கடனாக வழங்க முன்வந்துள்ளன.

இந்த 'புனரமைப்பு' வேலைகள் தோட்டத்துறையை முற்றிலும் நாசமாக்குவதோடு' அரசுடமையாக்கப்பட்ட தோட்டங்களை தனியார் கம்பனிகளிடம் திருப்பிக் கையளிக்கும் திட்டத்தை உள்ளடக்கியுள்ளன. இதனை நிதி அமைச்சரின் 1986ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பேச்சு சுட்டிக்காட்டுகின்றது.

இந்த 'புனரமைப்பு'க்களினால் தோட்டங்களில் பரந்தளவிலான வேலை நீக்கங்கள் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன. தோட்டப்பாடசாலைகளை மூடுதல், சௌக்கிய நிலையங்கள் கதவடைப்பு, சிசு மரணம், போஷாக்கின்மை ஆகியன அதிகரித்துள்ளன.

(● 2-ம் பக்கம் பார்க்கவும்)

### ஏகாதிபத்தியவாதிகளுக்கு கடன்வட்டியாக 1620 கோடி — இராணுவத்திற்கு 619 கோடி

# பாரிய தொழில் சங்கார வரவு செலவு திட்டம் ஒன்று

ஆயிரக்கணக்கான தொழில் அழிவு, பாரியளவில் பொருட்களின் விலை உயர்வு, வாழ்க்கைத் தரத்தை தகர்த்தல், சம்பள வெட்டு என்பவற்றை உள்ளடக்கிய வரவு செலவுத் திட்ட தாக்குதல் ஒன்றினை கடந்த 14ம் திகதி நிதியமைச்சர் ரோனி டீ மெல் சமர்ப்பித்துள்ளார்.

ஒரிரு கூட்டுத்தாபனங்களை தவிர்ந்த அரசாங்க கடனில் இயங்கிவரும் கூட்டுத்தாபனங்களை அகற்றி 'நட்ட ஈடு' வழங்கி தொழில் நீக்கம் செய்வதாக நிதியமைச்சர் கூறினார். பல திணைக்களங்களும் மூடப்படவிருக்கும் பட்டியலில் இடம்பெற உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் வாழ்க்கைக்கு மிக அவசியமான அத்தியாவசிய பண்டங்களும், சேவைகளும் விலை அதிகரிப்புக்குள்ளாகும் என தெரிவிக்கப்பெற்றதுடன் வாழ்க்கைச் செலவின அதிகரிப்பு கொடுப்பனவினை தற்போதிருக்கும் மட்டத்திலேயே சிறைப்படுத்தி விடும் சம்பள வெட்டும் நிதியமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு கொடுப்பனவோ அல்லது சம்பள சலுகையிலான அதிகரிப்பெதுவுமோ வழங்கப் போவதில்லை என அவர் கூறியுள்ளார்.

வறிய விவசாயிகளின் கண்களில் மண் தூவிவிடும் பொருட்டு ரூபாய் 150 கொண்ட ''மாதாந்த இளைப்பாற்று சம்பளம்'' என்ற முறைக்கான ஆலோசனை வழங்கிய நிதியமைச்சர் அதன் பொருட்டு அரசாங்கம் செலவிடும் அற்ப பணத்தை விட மேலதிகமான செலவினை அவ்விவசாயிகளிடமிருந்தே பிடுங்கப்போகிறார். விவசாயிகள் இந்த ''இளைப்பாற்று சம்பளம்'' ''நிவாரணம்'' முறைக்காக வரி செலுத்தவேண்டும்.

உணவுப்பண்டம் இறக்குமதியாகும் புடவை, மதுபானம், சிகரட் என்பவற்றின் விலைகளை வரவு செலவு திட்டத்தில் நேரடியாக உயர்த்திய நிதியமைச்சர் நூற்றுக்கு 1-20 சதவீதம் வரை வியாபார மொத்த விற்பனவுவரியை ஆறுவகையில் விதித்து சகல பண்டங்களின் விலைகளையும் மேலுமொரு விதத்தில் உயர்த்திவிட வழிவகை ஏற்படுத்தியுள்ளனர்.

எண்ணெய் கொழும்பு கூட்டுத்தாபனத்தை திறைசேரிக்கு 358 மில்லியன் ரூபாய்களை கட்டுமாறு உத்தரவிட்டதனால் எண்ணெய் விலை அதிகரிப்புக்கான தயாரிப்பு செய்யப்பட்டுள்ளதாக, கூட்டுத்தாபன தலைவர் தகம் விமலசேன தெரிவித்துள்ளார்.

அரச துறையில் தொழில் வெட்டுக்கள் எதிர்வரும் ஆண்டில் பல்வேறு திணைக்களங்களில் நடத்தப்பட உள்ளதாக நிதியமைச்சர் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார். நியமிக்கப்பட்ட குழுவொன்றின் அறிக்கையில் திணைக்களங்களில் அதிக தொழில் நிலைமை காணப்படுவது பரிசீலிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினர்.

தொழிலாள, விவசாய, மத்திய வர்க்க பிரிவினர்மீது தொடுக்கப்பட்டுள்ள முன்னெரு போதுமில்லாத வரவு செலவு திட்ட தாக்குதலானது யூ.என்.பி. அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கமும் சுகப்படுத்திவிட முடியாதளவு சீரழிந்து நாறியுள்ளதையே காட்டுகின்றது. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் தாக்குதல் தொடர்கள் இங்ஙனம் செயற்படுத்தப்படுவதுடன், நாட்டின் வருமானத்

(● 2-ம் பக்கம் பார்க்கவும்)

# ம. வி. மு. கட்சி மீதான தடையை அகற்று!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் விடுதலைப் போராட்டத்திற்கெதிரான ராஜீவ் காந்தி - ஜே. ஆர். சயவர்தன சதியை தகர்த்தெறி !



ராஜீவ் காந்தி

இந்திய ராஜீவ் காந்தி அரசாங்கம் தமிழ் விடுதலை போராட்டத்திற்கு தனது எதிர்ப்பினை மீண்டும் ஒரு தடவை தெரிவித்துள்ளது. பஹாமாசில் பொதுநலவாய நாடுகள் கூட்டத்தில் ஜே.ஆர். சயவர்தனவை சந்தித்த பின்னரும், ஓமானில் பிற்போக்கு சுல்தானின் நினைவஞ்சலியின் போது தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியை சந்தித்த பின்னரும் ராஜீவ் காந்தி யூ.என்.பி. அரசாங்கத்தின் தீர்மானம் பற்றி தமிழ் விடுதலை அமைப்புகளிடம் ஆலோசனைகளை சமர்ப்பிக்கும்படி நிர்ப்பந்திக்க ஆரம்பித்துள்ளார்.

சயவர்தன அரசாங்கத்தின் ''தீர்மானம்'' எனப்பட்டது, பேச்சுவார்த்தைக் களுக்கான எந்த அடிப்படையுமே கொண்டிருக்கவில்லை என தமிழீழ விடுதலை அமைப்புகள் பலவும் முடிவெடுத்த பின் ராஜீவ் காந்தி அரசாங்கம் நெருக்கடிக்குள் ஆழ்ந்துள்ளது. அமெரிக்க நீகன் அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தின பேரில் சயவர்தன அரசாங்கத்தை பேணும் பொருட்டான சமரசமொன்றை சுமத்திவிடவே காந்தியரசாங்கம் தலையிட்டுள்ளது.

'போர் நிறுத்த ஒப்பந்தம்' எனப்பட்டதும் 'போர் நிறுத்த மீறல் கண்காணிப்பு' என்பதும் வெறும் புளுகு என்பதும் அது தமிழ் மக்களுக்கெதிரான ஆத்திரமூட்டலை மூடி மறைக்கும் கந்தலே என்பதும் அம்பலப்படுத்தப்பட்டு பலநாளாயிற்று. இந்த கீழ்த்தரமான அமைப்புகள், காந்தியரசாங்கத் தலைமீட்டுடனுன, யூ.என்.பி. அரசாங்கத்தின் இனவாத தீர்மானத்தையும், மக்கட் கொலை கொள்கையையும் தாம் ஏற்க தயாரில்லை என தமிழீழ விடுதலை அமைப்புகள் வெளியிட்ட போது, லலித் அத்துலத் முதலி தாம் யுத்தம் செய்ய தயார் என்றே தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையானது மீண்டுமொரு தடவை, தமிழ் ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமையை பெற்றுத்தர தொழிலாள வர்க்கத்தின் போராட்டத்தை முன் எடுத்து செல்லும் தேவையை புலப்படுத்தி நிற்கின்றது. இந்த இனவாத முதலாளித்துவ அரசாங்கமானது ஈழ மக்களை அடக்கி ஒடுக்கும் யுத்தத்தின் சகல சுமைகளையும் தொழிலாள விவசாய மக்கள் மீது கடுமையுடன் சுமத்துதலை மிக மிக தீவிரமாக நடைமுறைப் படுத்த ஆரம்பித்துள்ளது.

வடக்கு கிழக்கு தமிழீழ மக்களுக்கெதிரான கொலைகளை நடத்துவது இத்தகைய கொலைகார கொள்கைகளை ஏனைய பகுதிகளுக்கும் பரப்புவதலோயே சாத்தியமாகும். இது தற்சமயம் ஏகாதிபத்திய வங்கியாளரது அழிவுக் கொள்கைகளுடன் இணைந்து தொடுக்கப்படும் விதத்தை வரவு செலவு திட்டத்தில் தெளிவாக காணலாம்.

சயவர்தன அரசாங்கம் 1620 கோடி ரூபாய்களை ஏகாதிபத்திய வங்கிகளுக்கு கடன் வட்டியாக வழங்கும் அதே சமயம், 619 கோடி ரூபாய்களை யுத்த செலவினத்துக்கு ஒதுக்கியுள்ளது. நூற்றுக்கு 2 சத வீதமான பாதுகாப்பு வரியொன்றை தொழிலாள வர்க்கத்திடமிருந்து பிடுங்கவும் அரசாங்கம தயாராகிறது.

யூ.என்.பி. அரசாங்கத்தின் 'தீர்மானம்' எனப்படுவதன் மீது பேச்சுவார்த்தைக்கு செல்ல இனவாத அரசாங்கத்தின் 'ஐக்கியத்தை' ஏற்கும்படி சமசமாஜ ஸ்டாலினிச தலைமைகள் தெரிவிக்கும்போது, அவர்கள் யூ.என்.பி. அரசாங்கத்தின் இந்த கொள்கைகளுக்கே பக்கபலமளித்து வருகின்றனர்.

தொழிலாள வர்க்கமானது, யூ.என்.பி. அரசாங்கத்தினதும் இனவாத படையணிகளதுத் இராணுவ தோல்விக்காக போராடியவாறு, தமிழ் தேசியம் தின் தேசிய பிரச்சனையை தீர்ப்பதற்கான போராட்டத்திற்கு தலைமை வகிக்க வேண்டும். இதனை தவிர்ந்த வேறொரு மாற்று வழியுமே கிடையாது. தமிழ் விடுதலைப் போராட்டத்துடன் கூட்டினை வென்றெடுத்தும் விவசாய மக்களின் ஆதரவை வென்றெடுத்தும் தொழிலாள வர்க்கமானது யூ.என்.பி. அரசாங்கத்தை தோற்கடித்து, முதலாளித்துவ அரசாங்கத்தை தகர்த்து ஆட்சிப் பொறுப்பை தன்கையிலேற்கவே போராட வேண்டும். இதன்மூலம் தமிழ் மக்களின் தேசிய உரிமையை நிலைநாட்டித்தர முடியும்.

ஏகாதிபத்திய வங்கியாளரதும் யூ.என்.பி.அரசாங்கத்தின் அழிவு கொள்கையை தகர்த்து விடுவதற்கான போராட்டத்திற்கான பாதை இதுவேயாகும்.

- வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்று!
- தமிழ் மக்களின் தேசிய உரிமைக்காக!
- ராஜீவ் காந்தி – சயவர்தன அரசாங்கத்திற்கு பந்தம் பிடிக்கும் சமசமாஜ, ஸ்டாலினிச மத்தியவாத தலைமைகளை அரசியல் ரீதியில் துடைத்துகட்டி புரட்சித் தலைமையை கட்டியெழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைக

## ஏகாதிபத்தியவாதிகளுக்கு கடன் வட்டியாக ,,.

( 1-ம் பக்கம் தொடர்ச்சி)

தில் பெரும்பங்கு ஏகாதிபத்தியவாத வங்கியாளருக்கு கப்பமாக செலுத்தவும், இராணுவ படையை பலப்படுத்தவும் செலவிடும் பொருட்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1986 ன் வெளிநாட்டு கடன செலுத்துவத காக ஒதுககப்பட்ட பணம் 1620 கோடி ரூபாய்கள் அல்லது அரசாங்கததின் வருமானததில் 43 சதவீதம் ஆகும்.

இராணுவ படைபலப்படுத்த ஒதுக்கப்பட்டுள்ள தொகை 619 கோடி ரூபாய்களாகும். இது 1978ல் ஒதுக்கிடப்பட்ட நிதியில் பதினொரு மடங்கு அதிகரித்ததாகும்.

ஏகாதிபத்திய வங்கியாளரிடமிருந்து இவ்வாண்டு கிடைக்கலாம் என எதிர்பார்த்த 1420 கோடி ரூபாய்கள் இதுவரை அவர்களிடம் கடனுக பெற்ற தொகைக்கு வட்டியளிக்கவும் போதுமானதல்ல. ஏகாதிபத்தியவாதிகளின் நிலைமையும் மிக மோசமானதாயிருப்பதால் தாம் மேலுல் நெருக்கடி நிலையில் தள்ளப்பட்டுள்ளதாயும் நிதியமைச்சர் ரோனி டி மெல் கூறியுள்ளார்.

6698.6 கோடி ரூபாய் கொண்ட வரவு செலவு திட்ட பற்றாக்குறையானது அதற்கு சமானமான பணத்தை வெளிநாடு, உள்நாட்டில் கடனுக பெற்று கொள்வதாலேயே நிரப்பப்பட உள்ளது.

சம்பளப் பணம் அழிக்கப்படுவதற்கும் தொழில்கள் தகர்க்கப்படுவதற்கும் எதிராக தொழிற் சங்க இயக்கம் உடனடியாக அணிதிரண்டு போராட்டத்தை ஆரம்பிப்பதை காலதாமதம செய்ய முடியாது.

- தொழில் நீக்கங்களுக்கெதிராக வேலைத்தலங்களில் உள்ளமாந்து கொள்ளல்,
- அதிகரிக்கும் வாழ்க்கை தர செலவினத்திற்கேற்ப அதிகரிக்கும் சம்பளம் தொழிற்சங்கங்களுள் சம்மதப் படுத்தப்பெற பிரசாரத்தை ஆரம்பி!
- இப்போராட்டங்களை ஒருங்கிணைந்து பொது வேலைநிறுத்தத்தை கூட்டு!
- குண்டர் பயங்கரவாதத்திற்கு எதிராக தொழிலாளரது பாதுகாப்பு படையை கட்டியெழுப்பு!

வரவு செலவு திட்ட தாக்குதலானது, முதலாளித்துவ அரசினை தகர்த்து, யூ.என்.பி. அரசாங்கத்தை விரட்டியடித்து சோசலிச கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் தொழிலாள – விவசாய அரசாங்கத்தை ஆட்சியேற்றும் தேவையையே புலப்படுத்துகின்றது. இத்தகைய முன்நோக்கின் அடிப்படையில் போராடும் புரட்சிகர கட்சியை கட்டியெழுக்க புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைக!

## இ தொ.கா. செயற்குழு கூட்டம் .

( 2-ம் பக்கம் பார்க்கவும்)

உலகச் சந்தையில் தேயிலையினதும், மற்றும் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களதும் விலை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளதோடு, இராணுவ வரவு செலவுத் திட்டத்தை யூ.என்.பி. அரசாங்கம் முன்வைத்துள்ள நிலையிலேயே இந்த அடிப்படை உரிமைகளுக்கு எதிரான தாக்குதல்கள் உக்கிரம் கண்டுள்ளன.

இத்தாக்குதல்களை தொண்டமான் தலைமையின் மோசடி ''அஹிம்சை'' போராட்டங்களால் பின்னடிக்கச் செய்து விட முடியாது. அவ்வாறே சமசமாஜ – கம்யூனிச தொழிற்சங்கத் தலைவர்கள் தோட்ட தொழிலாளர்களின் குடியுரிமை, தொழிலுரிமை போராட்டத்தினுல் கடைப்பிடிக்கும் எதிர்ப்புரட்சி மௌனம் யூ.என்.பி யின் இனவாத யுத்த நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றது.

இத்தலைமைகளின் துரோகங்களுக்கு எதிராக தோட்டங்களை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கும வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களை சூழ முழுத் தொழிலாள வர்க்கத்தையும் அணிதிரட்டுவது அவசியம்.

இந்தப் போராட்டத்தின் ஓர் அங்கமாக தொண்டமான் தலைமையை யூ.என்.பி. அரசாங்கத்துடனுன சகல பிற்போக்கு உறவுகளையும் துண்டித்துக் கொள்ளச செய்வதும, தொண்டமான் தலைமையை வெளியேற்றி சோசலிச வேலைத்திட்டத்திற்குப் போராடும் புரட்சித் தலைமையை இ தொ.காவினுள் கட்டி எழுப்புவதும் சகல போராளிகளதும் இன்றைய கடமையாகும்.

வவுனியாவில் :

## நெற்சாகுப்படி நிலப்பரப்பில் வீழ்ச்சி!

வவுனியா மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் இனவெறி இராணுவ நடவடிக்கைகளால் செற்சாகுபடி இடம் பெற்ற 40 000 எக்கர் நிலம் கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் சுமார் 5000 ஏக்கர் நிலத்தில் மட்டுமே இம்முறை நெற்சாகுபடி இடம் பெறவுள்ளது. கடலைப் பருப்பு போன்ற பயிர்களின் சாகுபடியின் நிலையும இதுவே. கிளிநொச்சி மாவட்டத்தில் சமீபத்தில் இடம் பெற்ற பெரும் மழையினுல பெருமளவிலான பயிர்கள் வெள்ளததால அடித்துச் செல்லப்பட்டுள்ளது விவசாயக் கடன், பசளை மானியம் போன்றவை இல்லாத காரணத்தால் 1950 ம் ஆண்டுகளில் இருந்து இங்கு பயிர்செய்த விவசாயிகள் என்றுமில்லாத நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தின் மிச்ச சொச்சங்களையும ஒழித்துக்கட்டும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. இராணுவ இணைப்புக் காரியாலயத்தின் கட்டுப்பாட்டுக்குள் வவுனியா செயலகத்தை கொணரும் தயாரிப்புக்களும் இடம பெறுகின்றன. விவசாயிகளின் உயிர்களுக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாத நிலையில் அவர்கள் மது பயிர்ச்செய்கை நிலங்களில் இருந்து வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரித்தானிய கிளையின் நெருக்கடியையிட்டு நான்காம் அகில அனைத்துலக குழுவின் தீர்மானம்




தொழிலாளர் புரட்சியின் மகாநாடு ஒன்று

தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தற்போதய அரசியல் நெருக்கடியானது நான்காம் அகில அனைத்துல குழு நிறுவப்பட்ட 1953ன் பின் மிகப் பாரதூரமான நெருக்கடியை அதற்குள் உருவாக்கியுள்ளது.

கட்சிக்கெதிரான ஹீலி சார்ப்பு திரிபாளாகளுக்கெதிரான போராட்டத்தில ஈடுபட்டுள்ளது பல பத்தாண்டுகளாக பிரித்தானியாவிலும் அனைத்துலகரீதியிலும் ரொட்ஸ்கிச இயககத்தை கட்டியெழுப்ப செய்த நீண்ட போராட்டத்தின் பெறுபேறுகளாம்.

இத்தகைய பெறுபேறுகள் எவையுமே ஸ்டாலினிசத்திற்கும் பப்லோவாத சீர்திருத்தத்திற்கும் எதிராக தொ.பு. கட்சியினதும் அதன் முன்தோன்றலான சோசலிச தொழிலாளர் கழகத்தின் தலைமைகளாலும் செய்யப்பட்ட தீர்க்கமான போராட்டத்தினலன்றி பெறப்படவில்லை.

## போராட்டம்

ரொட்ஸ்கிசத்தை கலைத்துவிட பப்லோவாத சீர்திருத்தவாதம் செய்த முயற்சிக்கெதிராக பிரித்தானிய தோழர்கள் நடத்திய பாரிய போராட்ட விளைவினலேயே நான்காம் அகில அனைத்துலக குழுவின் சகல கிளைகளும் உருவாக்கப்பட்டன.

ஜீ. ஹீலியின் ஊழல்களின் அமபலமாக்கலால் அவர் வெளியேற்றப்படவும் அவ்வூழல்களை மூடிமறைக்க முயற்சித்த தொ.பு. கட்சி அரசியல் குழுவின் மூடிமறைப்புடனும் முடிவுற்ற தற்போதய நெருக்கடியின் மூலவேராக சோசலிச புரட்சியின் உலக கட்சியை அதிகரித்துவரும் தேசிய ரீதியிலான முன்நோக்குப் பயிற்சிகளூடாக கட்டியெழுப்பும் உறுதியான பணியிலிருந்து விலகிச்சென்ற, தொ.பு. கட்சியின தலைமையின் நீண்டகால மாற்றம் உள்ளது.

தோழர் ஏ. ஜெனிலீஸ்ஸின் யூன் 30ம் திகதிய கடிதத்தில் ஜீ. ஹீலியின் ஊழல்மிக்க பயிற்சிகள உறுதிப்படுத்தப்பட்டதும் தொ.பு. கட்சி அரசியல் குழு ஓர் திட்டவட்டமான முறையில் கட்சியின் நெருக்கடியை எதிர்கொள்ளுதலை நிராகரித்தது.

அனைத்துலக தோழர்களதும் நான்காம் அகில அனைத்துலக குழுவின் சக சிந்தனையாளருடனும் ஒத்துழைப்பை நிராகரித்தவண்ணம் தொ.பு. கட்சி அரசியல் குழுவானது நான்காம் அகில அனைத்துலக குழுவுக்குள்ளும் தொ பு. கட்சி மத்திய குழுவினுள்ளும் ஹீலியின் ஊழல்களை மூடிமறைத்துவிடும் திட்டவட்டமான பிரசாரத்தை தொடக்கியது.

ஹீலியின் ஊழல்களை பற்றிய அவர் கையொப்பமிட்ட அவர் மீதான குற்றச்சாட்டை உறுதிபடுத்தவல்ல அவரது சாட்சியம் உட்பட்டவைகள் சமர்ப்பிக்கப்படவிருந்த யூலை மாத நான்காம் அகில அனைத்துலக குழுவின் கூட்டம் இரத்துசெய்யப்பட்டது.

நா.அ.அ. குழுவின் ஆகஸ்ட் 17ம் திகதிய கூட்டத்தில் தொ.பு. கட்சியின் நிதி நெருக்கடி பற்றிய பொய் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த பொய் அறிக்கையானது, தொ.பு. கட்சிக்கு ஆதரவளிக்க 82,000 டாலா கொண்ட நிதியை நா.அ.அ. குழுக்கிளைகளிடமிருந்தும் திரட்டி பெறும் வேண்டுகோளை விடுக்க பயன்படுத்தப்பட்டது. தொ.பு.க. அரசியல் குழு அங்கத்தவர் சகலரும் அறிந்திருந்த ஹீலியின் ஊழல் பற்றிய குற்றச்சாட்டு குறித்த எந்தவொரு வார்த்தை தன்னும் அங்கு குறிப்பிடப்படவில்லை.

நான்காம் அகில அனைத்துலக குழுவிற்கு ஹீலியின் ஊழல் விவகாரம் பற்றியது கொண்டு வரப்பட்டபோது தொ. பு. கட்சி, நா.அ.அ. குழுக்களுக்கு ஊடாக ஒரு சரியான விசாரணையொன்று கொண்டுநடத்தப்பட்டிருக்க வேண்டும்.

தொ.பு. கட்சி அரசியல் குழு இத்தகைய செயற்பாட்டை மறுத்தது. அதற்கு பதில் ஜெஸ்ஸிங்ஸசுடைய கடிதத்தை கீழ்ப்படுத்த வேலை பார்த்ததுடன் ஹீலி பற்றி விசாரிக்க ஒரு கட்டுப்பாட்டுகுழு அமைக்கும் யாப்புரீதியான கட்சி அங்கத்தவரது உரிமையை தடுத்து வைத்தது.

இதன் விளைவாக தொ.பு. கட்சிக்குள் ஓர் தலைமைத்துவம் பற்றிய ஓர் நியாயமான அவநம்பிக்கையும் கட்சியமைப்புக்குள் ஒழுங்கீனமும் கட்சி வேலைகளில் தடைகளும் காணப்படுகின்றது.

தொ.பு. கட்சி நெருக்கடியை சமாளிக்கவுள்ள முதலாவது நடவடிக்கையாக, அனைத்துலக குழுவின் சக சிந்தனையாளருடனான நெருங்கிய ஒத்துழைப்பு தேவையென்பது அதன் அங்கத்தவத்தாலும் தலைமைத்துவத்தாலும் உணரப்பட வேண்டுமென்பதே விளங்குகின்றது.

கடந்த காலங்களில் தொ.பு. கட்சியானது தனது அனைத்துலக தோழரிடம உலக கட்சியின் தேவையிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் குறுகிய தேசிய சிந்தனைகளிலிருந்தல்ல என்பதை தவறற்று எப்போதும் எடுத்துக் றியுள்ளது.

தற்போது ஒரு தீர்க்கமான பிளவு ஹீலிச்சார்பு கட்சித் திரிபாளரிடை ஏற்பட்டுவிட்டது. நான்காம் அகில அனைத்துலக குழுவானது தொ பு கட்சியின் சகல தலைவர்கள் அங்கத்தவர்களையும் அவர்களது சட்டரீதியான வேறுபாடுகள் முன்நோக்கு வேலைத்திட்டங்கள் என்பன எத்துணையானதாயிருப்பினும் எமது அனைத்துலக ரீதியிலான இயக்கத்தின் ஒழுக்கத்திற்கு இணங்கி அதன் அதிகாரத்தை நிறுவ தம்மை அர்ப்பணிப்பர் என்று நம்புகின்றது.

## காரியாளர்கள்

அரசியல் வேறுபாடுகள் அடக்கப்படவோ மறைககப்படவோ கூடாது. அவை தோன்ற கூடும் தோன்றி அவை நான்காம் அகில அனைத்துலக குழுவின் தலைமைக்கு கீழ் ஐக்கியப்பட்ட கட்சிக்குள்ளும் தொ. பு. கட்சியின் மத்திய குழுவுக்குள்ளும் மிக நன்கு விவாதிக்கப்பட வேண்டும். இவ்விதத்தில் தொ.பு. கட்சியின் காரியாளரும் முழு அனைத்துலக இயக்கமும் பயிற்றுவிக்கபட வேண்டும். அத்துடன் தற்போதய நெருக்கடியை நான்காம் அகில அனைத்துலக குழுவுக்கு நலன் தரவல்ல வழியில் தீர்க்க முடியும்.

நான்காம் அகில அனைத்துலக குழு பின்வரும் நடவடிக்கைகளை முன்வைக்கின்றது.

1. நான்காம் அகில அனைத்துலக குழுவின் அரசியலதிகாரங்களையும் உப பிரிவான பிரித்தானிய கிளையின் இணைப்பினை தனது தீர்மானங்களில் ஏற்பதான அடிப்படையில் சகல அங்கத்தவரையும் மீள்பதிவு செய்தல்.

2. ஜீ. ஹீலியின் ஊழல், அரசியல் குழுவின் மூடிமறைப்பு தொ. பு. கட்சியின் நிதி நெருக்கடி என்பவற்றுக்கு கட்டுப்படாத ஓர் சர்வதேச கட்டுப்பாட்டு குழுவின் விசாரணைக்கு தொ. பு. கட்சியின் சகல அங்கத்தவரதும் பூரண ஒத்துழைப்பு.

இந்த ஒப்பந்தத்தின் விதிகள் நான்காம் அகில அனைத்துலக குழுவினால் ஒழுங்குபடுத்தபடுவதுடன் சகல மீறல்களும் தனது அறிக்கையை 1986 சனவரி 1ம் திகதியன்று முடிவு செய்ய தீர்மானித்துள்ள அனைத்துலக கட்டுப்பாட்டு குழுவிடம் அறிவிக்கபெற வேண்டும்.

இந்த கோரிக்கைகளினை ஏற்கும் பட்சத்தில் 1986 ஆரம்ப பகுதியில் தொ.பு. கட்சியின் 8வது காங்கிரசுக்கான தயாருப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மிகப்பழைய முதலாளித்துவ நாட்டின் ஆளும் வர்க்கத்தினால் ஏற்படுத்தப்படும் எண்ணற்ற தாக்க தாக்கங்களின் கீழ் எமது பிரித்தானிய தோழர் வேலை பாரபபதை நாம் உணர்ந்துள்ளோம. இவை யாவும் உண்மையான அனைத்துலக பயிற்சியின் அடிப்படையினால் மட்டுமே நிறைவேற்றபடலாம.

நான்காம் அகிலத்திற்கு தமது வரலாற்று பொறுப்பையும் தமது தீர்மானங்களை அனைத்துலக ரீதியில் செயறபடுத்த உணர்த்தியும் அதனூடாக இக்கோரிக்கைகளை ஏற்குமாறும நாம் சகல தொ.பு. கட்சி அங்கத்தவரையும் வேண்டுகிறோம்.

(● 7-ம் பக்கம பார்க்கவும்)


## "தொழிலாளர் பதை"

### சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
'தொழிலாளர் பாதை' சந்தா விபரம்:

| | |
|---|---|
| 1 மாதம் — ரூ. 3–30 | 3 மாதம் — ரூ. 10–20 |
| 6 மாதம் — ரூ. 20–40 | 1 வருடம் — ரூ. 40–80 |

பெயர் :————————————

முகவரி :————————————

————————————

சந்தாக் காலம்:———— ரூ.————சதம்————

சந்தாப் பணதிற்காகிய
அஞ்சல் அல்லது காசுக்கட்டளையுடன்
நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பிவைக்கவேண்டிய
முகவரி :

நிர்வாகி, "தொழிலாளர் பாதை"
90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை, கொழும்பு 10.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எமது எண்ணம்

### சயவர்தனு — பெரேஸ் இரத்தக்களரிக் கூட்டினை தகர்த்தெறி!

சனதிபதி சயவர்தன, பாரிஸில் இஸ்ரேலிய பிற்போக்கு சியோனிச பிரதமர் ஷிமோன பெரோஸை சந்தித்து இரகசிய பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட்டதாகவும் அதுபற்றி எந்தவொரு விபரமும் தெரிவிப்பதில்லை எனவும் வெளியிடப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தினதும் முழு அராபிய உலகினதும் மக்கட் கொலைகாரனும் பிற்போக்கு பயங்கரவாதியுமான ஒருவனுடன் அரச தலைவர் மட்டத்தி  நிகழ்ந்த இந்த ரகசிய சந்திப்பு இலங்கையில் தமிழ் தேசியத்தையும் தொழிலாள ஒடுக்கப்பட்ட மக்களையும் இரத்த களரியால் அடக்கச் செய்த சதியே ஆகும்.

இஸ்ரேல் மொசாட்காரரை இலங்கைக்கு கொண்டு வந்து இராணுவ பயிற்சியளித்து கடந்த சில மாதங்களுக்கு முன் இந்து - முஸ்லிம் மோதல்களை தூண்டி கிழக்குப் பிரதேசத்தில் தமிழ் தேசிய இனக்கொலையை நடத்தி வருகின்றனர். சயவர்தன பெரேஸ் சந்திப்பு புதிய ஒரு போக்காகும். உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியினதும் இரத்தம் தோய்ந்த நடவடிக்கையை செயற்படுத்தி தொழிலாள விவசாய மக்களின் அடிப்படை சனநாயக உரிமைகளை தகர்ப்பதிலீடுபட்டுள்ள அரசாங்கத்திற்கு மேலும் மொசாட் காரர், ஆயுதங்களும் கொலைகார இராணுவ பயிற்சியும் தேவைப்படுகின்றது.

இதே சமயம் தமிழ் தேசிய இனப் போராட்டம் முழு நாட்டினையும் கைப்பற்றும் மார்க்ஸிய பயங்கரவாதமாகுமென்று கூறியவாறு சயவர்தன குரைக்க ஆரம்பித்துள்ளார். தனது உலக வங்கிப் பயங்கரவாதத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கத்தினதும் தமிழ் தேசியத்தினதும் விவசாய மக்களதும் போராட்டங்கள் ஒன்றிணைந்த தாக்குதலாக தயாராகி இனவாத சர்வாதிகாரத்தை தகர்க்குமோ என்ற பீதியிலேயே அவர் ஆழ்ந்துள்ளார்.

பெரேஸ் — சயவர்தன சதிபற்றி சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினிஸ்டுகள் பொய் எதிர்ப்பு காட்டியுள்ளனர். எனினும் ஸ்டாலினிஸ்டுகளும் இதற்கு பக்கபலமளித்துள்ளனர். தமிழ் விடுதலை இயக்கத்தை சீ ஐ ஏ. என சேறடிக்கும் ஸ்டாலினிஸ்டுகள் சயவர்தனவின் உண்மையான சி.ஐ.ஏ. சதியை மூடி மறைக்கின்றனர்.

ஸ்டாலினிஸ்டுகளது கபட எதிர்ப்பு 'ரசாரங்களில் வேலையில்லை. தொழிலாள வர்க்கம் யூ.என்.பி. அரசாங்கத்தையும் அரச இயந்திரத்தையும் தகர்த்து ஆட்சியை கையேற்று பிற்போக்கு சதியை தகர்ப்பதை உடனடியாக செய்ய வேண்டும். புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் தலைமைத்துவமளிப்பது அத்தகைய போராட்டத்திற்கேயாம்.


## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!

பெயர்:..........................................

முகவரி: ..........................................

கழகத்தைப்பற்றி எனக்கு மேலும்விபரங்கள் வேண்டும்

நிரப்பிய இப்பத்திரத்தை

அனுப்ப வேண்டிய முகவரி :

தேசிய செயலாளர் :

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு 10.


# மக்கள் முன்னணி

பாகம் 5

நவ சமசமாஜ (
அம்

**தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்பட்ட மக்கள் குழுவும் இன்று யூ என். பி. அரசாங்கத்திற்கும் முதலாளித்துவ அரசிற்கும் எதிராக எழுச்சியுற்றுள்ளதை தடை செய்யுமுகமாக மத்தியவாத சந்தர்ப்பவாதிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு முன்னரிலும் பார்க்க அசாத்தியமாயுள்ளது, எனினும் முதலாளித்துவ ஆட்சியின் முக்கிய பக்கபலமான மத்தியவாதம் அதனுல் தானுகவே மறைந்து போய்விட்டது. தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்பட்ட மக்கட் குழுவையும் ஆட்சிக்கான போராட்டத்திற்காக தயாரிக்கும் போராட்டத்தினுல்தான் அது புரட்சிகர கட்சியினுல் அம்பலப்படுத்தப்பட்டு தகர்க்கப்படும்.**

தமது சுய உரிமைகளை பேணும் பொருட்டு தொழிலாளர் யூ.என்.பிக்கு எதிராக போராட்டத்திலீடுபட தேவையில்லை என மத்தியவாதிகள் வெளிப்படையாக கூறுகின்றனர். அந்த நிலைப்பாட்டிலிருந்துகொண்டே தற்சமயம் வேலை நீக்கப்பட்டுள்ள வங்கி ஊழியர் பதினேழு பேரையும் மீண்டும் வேலைக்கமர்த்தி தொழிற்சங்க உரிமையை பேணும் பொருட்டு வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தில் முன்னணியில் நிற்கும் போராட்டத்திலிறங்கும் போராட்டத்திற்கு நவ சமசமாஜ தலைமைகள் பலத்த எதிரிகளாயுள்ளனர்.

அவர்களுக்கிணங்க, யூ என். பி. அரசாங்கத்தின் கீழ், தினமும் வளர்ச்சியடைந்துவரும் இராணுவ சர்வாதிகாரத்திற்கான மிரட்டல் எதுவுமே கிடையாது.

விக்ரமபாகு கருணுரத்ன 1985 நவ சம மாஜ மகாநாட்டிற்கு சமர்ப்பித்த ' அரசியல் தீர்மான'' கட்டுரை பின்வருமாறு கூறுகின்றது.

'' இன்று ஏகாதிபத்தினை எதிர்த்துக்கொண்டால ஏகாதிபத்தியம் சட்டரீதியான பொனபாட்டிசத்திற்கு அப்பால் செல்ல ஏகாதிபத்திய முதலாளித்துவ தலைவராக ஜே ஆர். சயவர்தனவுக்கு கடுமையாக ஆலோசனை வழங்குவதில்லை. அவர்கள் சட்டரீதியான பொனபாட்டிசத்தின் கீழேயே தமிழ் தேசிய முதலாளித்துவத்தினையும ஒருங்கிணைத்தபடி பலமான அடிப்படையிலமைந்த சட்டரீதியான உருவகத்தின் கீழேயே நிறுவப்பட வேண்டுமென்று மென்மேலும் அவருக்கு நிர்ப்பந்தம் செய்கின்றனர்.''

எத்துணை அசுவாசப்படுத்தல் ஒன்று இது? சட்டத்தை மதித்து ஐக்கியத்தை வென்றெடுக்க பாடுபடும் ஏகாதிபத்திய அமைப்பின் கீழ் வாழும் சந்சர்ப்பம் எமக்கு கிடைத்துள்ளதாம்! கருணுரத்ன உண்மையை மூடி மறைத்து இதனை கூறுவது, அந்த சட்ட அமைப்பு எனப்படுவதையே பல்வேறு வகையில் தகர்த்த வண்ணம் யூ.என்.பி. அரசாங்கம் வேலை பார்த்து வரும் சமயத்திலேயே ஆகும், மார்ஷல் சட்ட ஆட்சிக்கு அவசியமான பொலிஸ் - இராணுவ - குண்டர் அணியை தயாரித்தபடி இரத்த களரிமிக்க படு கொலைக்காக மக்களிடையே நாடு முழுதும் பாய்ச்சல் நடத்திவரும் சமயத்திலேயாகும்.

### நிவாரண மளித்தல்

நவ சமசமாஜ தலைமைகள் அது அப்படியில்லை என்று உறுதியாக கூறியபடி ஜே. ஆர். சயவர்தனவின் சனநாயகத்தை பற்றி உலகுக்கு உறுதியளிக்கின்றனர். கருணுரத்னவின் ''அரசியல் தீர்மானத்தில்'' மேலும் பின்வருமாறு கூறப்படுகின்றது. ''உண்மையில் நெருக்கடி தீவிரமடைய வெவ்வேறு கலந்துரையாடல்களை கட்டியவாறு செயபாடு போடுவதுடன் மறுபுறமாக, கூட்டுக்கும் நிவாரணமளிக்கவும் விழைவது ஜே ஆரின் தலைமைக்ள் காட்டப்பெறுகின்றது''

சனதிபதி சயவர்தனவின் தொலைக்காட்சி விரிவுரையினை கொண்டு அவரை மதிப்பிட்டு கொள்வதை தவிர்ந்த வேறெதனையுமே இந்த மத்தியவாத சந்தர்ப்பவாதி செய்யவில்லை.

மணிக்கூட்டு சத்தம் கேட்டு திகைப்புறும் இளம்பிள்ளையின் அறியாமைக்கொப்ப அவர் வெடுத்து சிதறப்போகும் பொனபாட்டிச சர்வாதிகார நிலைப்பாடு பற்றியும் நிவாரணம் பற்றியும் உறுதி கூறுகிறுர். தொழிலாள வர்க்கமும், மொனராகலை விவசாயிகளும், சயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்களும், துடல்ல ஊர் மக்களும் உட்பட்ட அநேக ஒடுக்கப்பட்ட மக்கள் குழுவினர் தமிழினத்தை போலவே நாளாந்தம் இந்த சந்தர்ப்பவாத சனநாயக பாணியிலானவரின் சொற்களுக்கு மறுபுறமான தன்மையை அல்லவா கண்டு வருகின்றனர்?

### மத்தியவாதி

சயவர்தனவின் பொனபாட்டிச சர்வாதிகாரத்தின் ஊசலாட்டம் நிறுத்தப்படுமென்றும் இராணுவ சர்வாதிகாரம் சுமத்தப்படுமென்றும் வர்க்க உணர்வுடன் தெளிவுகொள்ளும் மக்கட் குழுவை ஆசுவாசப்படுத்த இந்த மத்தியவாதியிடம் வேறு சிலவும் உண்டு. அது சயவர்தனவின பொனபாட்டிசம் மேலும்தொடர்ந்து ஊசலாடுவதற்கு இடமளிக்கும் மக்கள் முன்னணியே ஆகும்.

இராணுவ சர்வாதிகாரத்திற்கான யூ.என்.பியின் நடவடிக்கை வலுப்படுகையில் நவ சமசமாஜ தலைமைகளுக்கிணங்க ஒராண்டு அவசரகால சட்டமும கட்சித்தடையும் நிலவுவதனூடாக பொது போராட்டம் கீழ்ப்படுத்தப்படுவதால் மக்கள் கட்சியின் பால் அரசியல் போக்கு செல்வதை எதிர்பார்க்க முடியும் என்பதே நிகழ்கின்றது. கருணுரத்ன இதனை எழுதும்போது சமசமாஜ - ஸ்டாலினிச தலைமைகளின் உதவியுடன் அரசாங்கம் நடத்திய அவசரகாலசட்ட ஆட்சிக்கு ஒராண்டல்ல ஈராண்டுகள் முடிவடைந்துவிட்டன. அது தமிழின, தோட்ட தொழிலாள, சிங்கள மொழி பேசும் மக்கள் என்பாரை பொறுத்தமட்டில் இரத்தக்களரி நிறைந்த அரச கொலைகள் நடந்த காலப்பகுதியாகும். அது மட்டுமல்ல, அது தமிழ் விடுதலை போராளிகளது ஆயுத விடுதலை யுத்தம் தீவிரமடைந்த, தோட்ட தொழிலாளரது எதிர்தாக்குதல் கூடிய, மொனராகலை விவசாயிகள் அவசரகால சட்டத்தை உடைத்து ஊர்வலமாக சென்ற காலப்பகுதியுமாகும். வர்க்கப் போராட்டம் இருபக்க சட்டவரையறைகளையும் உடைத்தபடி புரட்சியும் எதிர்ப்புரட்சியும் ஒன்றுடன் ஒன்று எதிர்கொண்டு வளர ஆரம்பித்துள்ளது. தாதிகளுக்கும் வங்கி ஊழியருக்கும் அத்தியாவசிய சேவை

www.tamilarangam.net



# யின் சூழ் பாடிகள்

## (1985) மகாநாட்டு கட்டுரையிலிருந்து பலமாக்கபபடுகின்றது

விஜே டயஸ்

சட்டத்தை மீறும் சக்தி இந்நிலைமையிலேயே காணப்பட்டது: இத்தகைய எச் சந்தர்ப்பங்களிலும் மக்கள் கட்சியை நாம் காணவில்லை.

எனினும் நவ சமசமாஜ மக்கள் முன்னணியின் சேவகனுக்கு மக்கள் முன்னணியை தவிர்ந்த வேறெதுவுமே காணக் கிடைக்கவில்லை. அதனால்தான் அவர் தனது பூசிமெழுகும் பேச்சுக்களில் வாயூறியவாறு அதற்கு மேலும் சுவையூட்டிய படி தமது தனித்த வேலைத் திட்டங்களை பின்வரும் நடவடிக்கைகளடிப்படையில் அமைந்துள்ளார். ''அவ்வாறெனில் வேலைத்தல மட்டத்தில் நிர்வாக சபைகள் அவற்றை அடிப்படையாக கொண்ட பொது மக்கள் பிரதிநிதி சபை என்ற இன்றைய இடதுசாரி முன்னணிக்குள் கரைத்துவிடவேண்டிய சுலோகமேயாம்''

1964 ல் பிரசித்தியற்ற சிறிலங்கா கூட்டாசாங்கத்தை நிறுவி அதன் விமர்சனத்துக் குரிய கூட்டாடியான கொல்வின் ஆர். டி. சில்வாவும் லெஸ்லி குணவர்தனவும் பிற்பட்ட காலங்களில் பிற்போக்கு கூட்டினை பேணும் பொருட்டு பெரும் பிரயாசைப்பட்டதும் இதற்கு சமமான வலுவை மிக்க வேலைத் திட்டத்தினடிப்படையிலேயாம். அவர்களது மக்கள் குழு''வும் அவற்றை தயாரிக்க நிறுவிய சுய ஆட்சி தத்துவமும் இன்று நவ சமசமாஜிஸ்டு வேலைத்தல மட்டத்தில நிர்வாக குழுக்கள் என்று குறிப்பிடுவதேயாம்.

1970ம் ஆண்டுகளில் கட்டியெழுப்பப்பட்ட மக்கள் குழு மக்கள் முன்னணிக்கு பதில் போராள தொழிலாளரை வேட்டையாடும் பிரசுத்தமான குழுவாக ஜாதிக சேவக சங்கமாயும் 1977ல் யூ.என்.பி யின் வெற்றிக்கு வழிகோலிவிடும் குழுவாயும் செயலாற்றியதைபோல கருணரத்னவின் குழு உருவாகினால், அது சயவர்தனவின் பொலபாட்டிசத்தை பேண தொழிலாளரை வேட்டையாடி இராணுவ சர்வாதிகாரத்திறகு வழிகோலும் குழுவாகவே விளங்கும் மத்திய வங்கிக்குள் புக. கழக மத்திய குழு உறுப்பினரான ... நிகிஸ்ஸ்ஸ்னி நிர்வாகிகள் வேலை நீக்கியபோது நவ சமசமாஜ கட்சி து. கருணரத்ன ஐ. டீ. சில்வ போன்ற யூ.என.பி வால்பிடிகளுடன் சேர்ந்து குழு நிறுவி நிகஸ்ஸவை வேலை நீக்கியது சரியென்று கூறச் செய்யும் பொருட்டு வேலை பார்த்த விதம் தற்போது சகல போராளிகளுக்கும் கிடைத்துள்ள புத்திமதி புரட்டும் ஓர் படிப்பினையே ஆகும். இன்று இராணுவ சர்வாதிகாரம் ஒன்று ஏற்படும் என்று உறுதி கூறியபடி அதனையே ஏற்படுத்திவிட கங்கணம் கட்டியுள்ள மத்தியவாத சீர்திருத்தகாரரை இனம் கண்டறிய இதிலும் பார்க்க வேறு எடுத்துக்காட்டு தேவையா?

கொம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மகாநாட்டின் போது ''உலக பொருளாதார நெருக்கடியும் அகிலத்தின் பொறுப்பும்'' என்ற தலைப்பில் பேசிய ரொட்ஸ்கி மத்தியவாதிகளதும் புரட்சியாளரிடையிலும் உள்ள மாறுபாட்டை பற்றி இப்படிக் கூறியுள்ளார்,

### முரண்பாடு

''எனது கருத்துப் பிரகாரம் எமது சாத்தியம் அசாத்தியம் என்பன, நாம் சுயாதீன சமூக சனநாயகவாதிகளுக்கும் எமக்குமிடையிலான வேறுபாடு நாம் 1919ல் புரட்சியை நடத்துவோம் என்று கூறியபோது அவர்கள் வெகு காலத்திற்கு பின் அது நடக்கும் என்று கூறினர் என்பதில் அல்ல காணப்படுகின்றது வேறுபாடு அவ்விடத்திலன்று இருக்கவும் முடியாது. சமூக சனநாயகவாதிகளும், சுயாதீன சமூக சனநாயகவாதிகளும் எச் சூழ்நிலையில் அல்லது எச் சந்தர்ப்பங்களின் கீழ் புரட்சிக்கு எதிராக முதலாளிகளுக்கு உதவுகிறார்கள் என்பதிலேயாகும்' இதற்கு மாறாக நாம் சகல சந்தர்ப்பத்திலும் எத்தகைய மாற்றத்துக்கு ஆட்படினும் புரட்சிகர தாக்குதல் ஆட்சியேற்றல் என்பதற்காக எந்நேரமும் தயாராயிருப்போம் தயாராகிகொண்டிருப்போம்''

மத்தியவாதி எச்சந்தர்ப்பத்திலும் எவ்விடத்திலும் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினதும் அவ்வரச இயந்திரத்தினதும் அடிமையே, நவ சமசமாஜ தலைமைகளது நுணுக்கமான சூத்திரமானது அவர்கள் பெரிதுபடுத்தி காட்டும் தத்துவார்த்த பெருமிதத்தின்று இன்று யூ.என்.பி. ஆட்சியின பாதுகாப்புக்காக பாடுபடும் மக்கள் முன்னணியை சுதந்திரிவிடுவது அத்துணை சுலபமல்ல என்றதை மட்டுமே எடுத்துக்காட்டுகிறது. அதனாலேயே இந்த கைங்கரியத்திலீடுபட்டவர்களது பொறுப்பும் தேவைக்கதிக ஆசைப்படுகிறதாயுள்ளது.

அவனுக்கு வர்க்க போராட்ட வரலாற்றை கீழ்ப்படுத்தி வைக்க நேரும் தொழிலாள ஒடுக்கப்பட்ட மக்களது கண்முன் நிகழும் சம்பவங்கள் பற்றியும் திரிபுபடுத்தி கூற நேரலாம். மார்க்ஸியத்திற்கு விசேடமாக ரொட்ஸ்கிசத்திற்கும் நிரந்தர புரட்சி கோட்பாட்டுக்கும் மாறி மாறி தாக்குதல் வழங்க நேரிடும்.

### நடைமுறையியல்

யூ.என்.பிக்கு வழிகோலும் மக்கள் முன்னணியை நியாயப்படுத்துமுகமாக கருணரத்ன நாணயக்கார கன்னே சிறிலங்கா சுதந்திர கட்சியில் பாரிய தொழிலாள வர்க்க பிரிவுகள் அணிதிரண்டுள்ளதாக பெரிதுபடுத்தி கூறுகின்றது. அதுமட்டுமன்றி இங்ஙனம் அணிதிரண்டுள்ள தொழிலாள வர்க்கம் சிறிலங்க சுதந்திர கட்சியுடன் 1983 வரை சேர்ந்திருந்ததையும் வெறும் குருடராக வாந்தியெடுத்து காட்டுகின்றனர். அவர்களது கட்டுரையில் இது பற்றி கூறும் சொற்தொடர் பின்வருமாறு ''எமது நிர்ப்பந்தத்தினாலும் பொதுவாக இடதுசாரி நடைமுறை நிர்ப்பந்தத்தாலும் (1983) சி.ல.சு. கட்சிக்குள் அணிதிரண்டுள்ள தொழிலாள வர்க்க பிரிவுகள் வேறுபட்டு சுயாதீன போக்கினை ஆரம்பித்ததை தடுக்க முடியாது''

கருங்காலிகள் ஒரிருவரை அரசாங்கத்தின் பலத்தின்கீழ் முன்னணியில் வைத்தபடி சிறிலங்காகாரர் சுமத்திய தொழிற்சங்க தொழிலாள அமைப்பு எனப்பட்டது ஜாதிக சேவக சங்கத்திற்கு இரண்டாவதான எந்தவொரு வர்க்க அமைப்பல்ல. மார்க்ஸிய எதிர்ப்பு மத்தியவாதி அரசாங்கத்தினது புள்ளிவிபரங்களை கொண்டு தொழிலாள வர்க்க அரசியலை இனம்காட்டுவதை தவிர வேறொன்றையுமறியான். சிறிலங்கா தொழிற் சங்கங்கள் எனப்பட்டவைகளூடாக 1976 பொது வேலை நிறுத்தத்தில் காட்டப்பட்டதை போன்று ஜாதிக சேவக சங்கங்களது பிரசாரமும தற்போது வங்கிப் போராட்டதுள்ளும் தாதிமார் போராட்டம் தோட்டப்புற போராட்டங்களூடாகவும் காலாவதியானதாயுள்ளது. எனினும் மார்க்ஸிய எதிர்ப்பு மத்தியவாதி தொழிலாள வர்க்கத்தின் நடைமுறையியலை ஏற்கமாட்டான். ஆளும் வர்க்க கஷ்டநஷ்டங்களைபற்றியே அவனது கருத்து எந்நேரமும் ஈர்க்கப்படும் இவ்விடத்திலிருந்து கருணரத்னவால் கூறப்பட்டதாவது சில சு. கட்சியை சூம அநேக தொழிலாளர் அணிதிரள்வது மட்டுமல்ல தொழிலாள வர்க்கத்தின் போராளப் பிரிவும் அங்கேதான் காணப்படுகின்றதென்பதுமாகும் அவர்கள் இப்போது மக்கள் கட்சியிலேயே உள்ளனர். கருணரத்னவின் கட்டுரை அதனை பின்வருமாறு கூறுகிறது. தொழிலாள வர்க்கத்தின் போராளத்திரமாக மக்கட் பிரிவு மக்கட் கட்சியின்கீழ் காணப்படுவது இதற்கான காரணமாகும். இதனால் மக்கட் கட்சியை தொழிலாள வர்க்கத்தில் பெரும் பாலானோரை பிரதிநிதித்துவபடுத்தும் கட்சியாக நாம் விளிப்பது தவறற்றது.''

திருமதி பண்டாரநாயகாவின் தொனியில் ''ஒருங்கிணைந்த சிறந்த போராள தொழிலாளர் பெரும் பான்மை'' தற்சமயம் அவரது மகளின் பின் காணப்படுகிறதாம்.

மத்தியவாதிகள் மக்கள் கட்சிக்கு பாடுபடும் இந்த முயற்சி வேறொன்றுமல்ல இறுதியில் சமசமாஜ ஸ்டாலினிஸ்டுகளுடன் இணைந்து ஒரே கும்பலாக சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் மக்கள் முன்னணியை ஏற்படுத்தவேயாகும் என்பதை கருணரத்னவின் ''அரசியல் தீர்மானங்களிலேயே அம்பலமாகின்றது. நேரடியாக சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் மக்கள் முன்னணிக்கு செல்ல விழைவதை பற்றிய கதை கூட தொழிலாள – ஒடுக்கப்பட்ட மக்களிடையிலான அனுபவமிக்க பிரிவுகளின் வெறுப்பை தூண்டிவிடுவதாகுமென இந்த மத்தியவாதியை போல சமசமாஜ ஸ்டாலினிச தலைமைகளும் நன்கறிவர். அவர்களுக்கு உதவுவதுபற்றி இலங்கரத்ன என்ற தரகர் பழைய தாகு முறையை ஒத்த புது மாதிரித் தசினை அமைத்து தந்துள்ளார். சமசமாஜ ஸ்டாலினிச தலைமைகளை போல நவ சமசமாஜ சந்தர்ப்பவாதிகளும் பாடுபடுவது அவரதும மக்கள் கட்சி என்பதனூடாகவேயாம். அதனூடாக சில சு. கட்சியுடனான பழைய மணலினை புகைப்படத்தையே அவர்கள் காணமுயல்கின்றனர்.

### சி.ல.சு. கட்சி

நாம் பின்வருமாறு சுட்டிக் காட்டுவது கருணரத்னவின் அரசியல் தீர்மானக் கட்டுரைகளின் ஒரே ஒரு பக்கத்தில் வரும் சில வசனங்களேயாகும்.

''சி.ல சுதந்திர கட்சி இன்னமும் கிராமப்புறங்களில் சக்திமிக்கதாயுள்ளது. விசேடமாக அரசாங்கத்துடன் கலவரம் விளைவிக்கும் சம்பிரதாய குட்டி முதலாளித்துவமும் சார்வது சில சு. கட்சிபக்கமேயாம் இதன்படி பார்ப்பின் சி.ல.சு. கட்சி மீண்டுமொரு தடவை 1956 க்கு முன்பிருந்த மக்களடிப்படையை கொண்டுள்ளது'

இதனைவிட சி.ல.சு.க. மீண்டுமொரு தடவை 1964க்கு முன்பிருந்த நிலைக்கு திரும்பியுள்ளது இன்னும் கூட கிராமப்புற குட்டி முதலாளித்துவ பிரிவுகளின் தலைமைத்துவத்தை எடுக்க கூடிய தலைமைத்துவத்தை எடுக்ககூடிய தலைமைத்துவத்தை பறிக்க கூடிய தேசிய முதலாளித்துவ சக்தியொன்றாக அது பலமிக்கதாக விளங்குகிறது''

சந்தர்ப்பவாதி இவ்விடத்தில் வாயூறுவது எதற்காக என விளங்கிக்கொள்வது ஓரளவு மூளைசாலிக்கு கஷ்டமான காரணமல்ல. சமசமாஜ துரோகிகள் 1960 ம் ஆண்டுக்காலங்களிலிருந்து சி.ல.சு. கட்சியுடன் கூட்டுக்காக பாவித்ததும் 'கிராமப்புற சக்தி' என்ற தர்க்கத்தையே ஆகும். அதன் பிரகாரம் சி.ல.சு. கட்சியுடன் இணைவது தொழிலாள விவசாய கூட்டுக்காகவென்று பெரிதுபடுத்தி காட்டப்படுகிறது. நவ சமசமாஜ சந்தர்ப்பவாதி தற்போது மேலும் முன்சென்று மக்கள் கட்சி அத்தகைய திறமையான போரான தொழிலாளர் பெரும்பான்மையையும் சி.ல.சு. கட்சியை கிராமப்புற சக்தியாகவும் பெயரிட்டு தொழிலாள – விவசாய சாட்டினை முன்பிருந்த சி.ல.சு. கட்சிக்குள்ளேயே காணப்பட்டதென உறுதி கூறுகிறார். இதன்படி நவ சமசமாஜ தலைவருள் தமது கூட்டைப்பற்றிய ஆத்மகவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

தொழிலாள விவசாய கூட்டு பற்றி ஸ்டாலினிஸ்டுகள் வளர்த்த சகல துரோக கருத்துகளையும் அழித்துவிடும் போரில் ரொட்ஸ்கி ஈடுபட்டார். அவர் தெளிவுபடுத்தி காட்டிய பாதை பின்வருமாறு, ''குட்டி முதலாளித்துவத்தின் கலவரகார சுரண்டலாளர்களுடன் பாராளுமன்றத்துக்கு இழுபட்டு செல்பவருக்கெதிராக தொழிலாள வர்க்கத்திற்கு குட்டி முதலாளித்துவ மக்களுடன் மிகப் பாரியதான திறமையான நீண்டகாலம் நீடிக்க வல்ல இணைப்பை ஏற்படுத்த புரட்சிகர வேலைத்திட்டங்களாலே அதாவது தொழிலாள வர்க்கம் ஆட்சியேற்று சகல உழைக்கும் மக்களினது நலன்களுக்காக சொத்துடமை தொடர்புகளை புரட்சிகரமாக மாற்றம் ஏற்படுத்துவதனால் மட்டுமே சாத்தியமாகும். முதலாளித்துவ வர்க்கத்துடனான கூட்டான முன்னணி புரட்சிக்கு விலங்கு ஒன்றாக விளங்குவதுடன் ஏகாதிபத்தியத்துக்கு பாதுகாப்பையும் வழங்குகின்றது''

''சீர்திருத்த வாதத்திற்கும் ஸ்டாலினிசத்திற்கும் எதிரான போராட்டம் தற்போது எதுலாவெற்றுக்கும் மேலாக முதலாளித்துவ வர்க்கத்துடனான முன்னணிக்கு எதிராக போராட்டம் ஒன்றாகவே உள்ளது''. (புதிய புரட்சிகர எழுச்சியும் நான்காம் அகிலத்தின் பொறுப்புகளும்)

நவ சமசமாஜ சந்தர்ப்பவாதிகள் சமசமாஜ – ஸ்டாலினிச தலைமைகளுக்கு மக்கள் முன்னணியை சுமத்திவிடும் பொருட்டு ஏணி கட்டித்தருகிறார் ... க்கு சிவப்பு ஆடை போர்த்தி மரணமடையவுள்ள சிறிலங்கா சுதந்திர கட்சி அல்லது யூ.என். பி. இரண்டிலொன்றை ஆட்சிக்கு வைப்பதற்கு காத்துள்ளனர்.

( 6- பக்கம் பார்க்கவும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் முன்னணியின் கூழ் பாடிகள்


(● 5-ம் பக்கம் தொடர்ச்சி)

## சந்தர்ப்பவாதம்

சமசமாஜ ஸ்டாலினிச தலைமைகள் யூ.என்.பி. அரசாங்கத்தையும் முதலாளித்துவ அரசினையும் பேணும் பொருட்டு வெளிப்படையாக வேலை பார்க்கையில் அதற்கெதிராக எழுச்சியுறும் தொழிலாள–ஒடுக்கப்பட்ட மக்களின் பொறுப்பை சமாளிக்க கருணாரத்னவும் நாணயக்காரவும் அதனை தலைமைகளது துரோகமல்ல அறியாமலேயாகும் என்று பிரமையூட்டுகின்றனர். இத்தகைய வசனங்களை அவர்கள் பாவிக்கின்றனர். ''விசேடமாக இடதுசாரி தலைமைகளின் கீழ் சட்டத்திற்கு சவால்விடுத்து செல்லும் போக்கு பற்றி இடதுசாரி தலைமைகளிடையே மூன்றுவகையிலும் உள்ளது தெளிவற்ற ஓர் சுபாவமேயாகும். அவர்கள் விளங்காதுள்ள ஒரு விடயமென்னவெனில் அந்த சக்தி சட்டரீதியென்ற போக்கை உடைத்து சகலவும் வழியுண்டு என்பதே''.

நாற்புறமுமுள்ள துரோகிகளுக்கும் வர்க்க எதிரிகளுக்கும் சந்தர்ப்பவாதி எச்சமயத்திலும் கீழ்ப்படுகின்றான். இது போராளிகளை பயிற்றுவிப்பதல்ல அவர்களை உயிருடன் கருவாடாக்கும் வேலைத்திட்டமே இது.

1946 ம் ஆண்டுக் காலங்களில் இருந்தே வர்க்க துரோகிகளுக்கும் வர்க்க எதிரிகளுக்கும் கீழ்ப்பட்டு அவர்களுடன் சமரசவாதத்துக்கு செல்லும் இடதுசாரி சீரழிந்த மரபும் நவ சமசமாஜ தலைமைக்குள் இப்படி தாக்க ரீதியில் அம்பலமாகின்றது. இந்த மரபின் முன்தோன்றல் பிரித்தானிய ஏகாதிபத்திய லேபர் கட்சிக்குள் குந்தியுள்ள டெட் கிராண்ட் ஆகும். அவர் நான்காம் அகில பிரித்தானிய கிளைக்குள் உள்ள வலதுசாரி சந்தர்ப்பவாதி ஹஸ்டின் கும்பலுடனேயே கூடிகுலாவயயர். ஹஸ்டின் 1950ல் ரொட்ஸ்கிசத்தை கைவிட்டு ஏகாதிபத்திய லேபர் கட்சிக்குள் நுளைந்தவர். அவரை வலக்க ரொட்ஸ்கிச கட்சிக்குள் கொண்டுவந்த தீர்மானத்திற்கு கிராண்ட் வாக்களிக்காது விலகியிருந்தார். இந்த காரணத்தினுல் 1951 ஆகஸ்டில் நடந்த நான்காம் அகிலத்தின் மூன்ருவது உலக மகாநாடு கிராண்டை விலக்கிவிட ஏகமனதாக வாக்களித்தது. அவரை வலதுசாரி சந்தர்ப்பவாதியாகவே பெயரிட்டனர்.



நவ சமசமாஜ தலைமையில் தற்சமயம் இந்த பிரசித்தியற்ற வலதுசாரி அரசியலே தற்போது நிலவுகின்றது. இன்று வர்க்க போராட்டம் சமரசமற்ற இடத்திற்கு புரட்சிகரவாதிகளை ஏற்படுத்தியுள்ள சாதகமான நிலைமையில் இந்த சிவப்பு ஆடை போர்த்த முதலாளித்துவ அடிமைகள் தமது சுயரூபத்தை வெளிப்படுத்துகின்றனர். இதனை சகல போரர்ட்டங்களிலும் சளையாது எடுத்துகூறி வலதுசாரி சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக புரட்சிக் கட்சியை தொழிலாள ஒடுக்கப்பட்ட மக்களிடையே நிலைநாட்ட நான்காம் அகில அனைத்துலக குழுவும் அதன் நவ சமசமாஜ கட்சியினர் பொலிஸ் இராணுவ வீரர்களுக்கு சம்பள உயர்வு வேண்டுமென கோரி இரத்மலானை பகுதியில் ஒட்டப்பட்டிருந்தசுவரொட்டி ஒன்று,

இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் போராடுகின்றன.

—முடிவு—

# இ. வ. ஊ. சங்க அமைப்பாளர் தலைமைத்துவத்திற்கு எதிர்ப்பளிக்கின்றனர்

ஒத்தோபர் 22ம் திகதி குருநாகல் பிரதேச இ. வ. ஊ. சங்க அமைப்பாளர் கூட்டமொன்றில் சங்கத்தின் எதிர்ப்பு நடவடிக்கையையும் நிறுத்திவிட தலைமைத்துவம் எடுத்த முடிவு பலத்த விமர்சனத்துக்குள்ளாகியது.

எதிர்ப்பு நடவடிக்கையை நிறுத்துவது குறித்து அங்கத்தவரிடையே எழுந்த எதிர்ப்பின் மத்தியிலேயே கிளை அமைப்பாளரது கூட்டம் கூட்டப்பெற்றிருந்தது.

கூட்டத்தில் உரையாற்றிய சங்கத் தலைவர் பீ. பண்டார எதிர்ப்பு நடவடிக்கையை நிறுத்த எடுத்த முடிவு சரியானதென நிரூபிக்க முயன்றார்.

''போராட்டம் உயர் கட்டத்தை அடைந்திருந்த வேளையில் அதனை நிறுத்துவது காட்டிக்கொடுப்பல்ல'' என்றும் சங்கத்தில் சௌஜன்ணியமான வேளை நிலவுவதால் போராட்டத்தை நிறுத்த தான் தீர்மானித்ததாயும் அவர் கூறினூர்.

மேலும் உரையாற்றிய பீ. பண்டார வேலை நீக்கப்பட்ட சங்க தலைமைகளது வேலையை மீண்டும் வழங்குமாறு நிர்வாகிகளிடம் பேச முடிந்ததற்கு எதிர்ப்பு நடவடிக்கையினுல் நிர்வாகிகளுக்கேற்பட்ட பீதியே காரணமாகுமென்று கூறினூர் வேலை நீக்கப்பட்ட தொழிற்சங்க தலைமைகளை திருப்பி எடுப்பதாக நிர்வாகிகள் கூறுகையில் பொறுப்புமிக்க சங்கமொன்ருக அதற்கு ஒத்துழைப்பளிப்பதை தவிர வேறொன்றையும் செய்ய முடியாதிருந்ததென அவர் தெரிவித்தார்.

நிர்வாகிகள் பயனற்ற நிபந்தனைகளை சமர்ப்பிக்கும்போது 90 நாள் கால அவகாச நிபந்தனைகளை தெரிவு செய்தது



சங்கத்தின் உயர் உப செயலாளரான ரத்னுயகா நிர்வாக குழுவின் தீர்மானத்தற்கு தான் ஆரம்பத்தல் எதிர்ப்பளிப்பினும் தலைமைக்காரியாலயத்திறகு சென்று தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தின்று ஏற்ருரென்று தெரிவித்தார்.

குருநாகலை அமைப்பாளரிடமிருந்து பாரிய எதிர்ப்பும் வினுக்களும் எழுப்பப்பட்டன. குருநாகல் கிளையின் யாபா பண்டார இவ்விதமாக தலைவழியை எடுக்க நேரும் என்று குறிப்பிட்டார்.

பிரதேச அமைப்பாளர் எதிர்ப்பு நடவடிக்கையை நிறுத்துமாறு தொலைபேசி யூடாக அறிவித்தபோது நம்ப முடியா

(● 7ம் பக்கம் பார்க்கவும்)

## பிரித்தானிய ...

3-ம் பக்கம் தொடர்ச்சி

ஒத்தோபர் 27, 1985

பதினைந்தாண்டுகளாக கட்சி அங்கத்தவராயிருந்து கடந்த 25 ம் திகதி வெள்ளிக்கிழமை கடுமையாக நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தவரென அறியப்பட்ட கல்விஸ் ஸீருவர்ட் என்றவருக்கான ஓர் நிமிட மௌனத்தை மகாநாடு கடைப்பிடித்தது. மகாநாடு ஓர் நேர்மையான கொள்கைரீதியான தோழரை துக்ககரமாக இழந்ததையிட்டு அவருக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### டி. என். நிகிஸானை மீண்டும் சேவைக்கமர்த்தும் போராட்டம்:

# ந.ச.ச. கட்சியின் சேறடிப்பிற்கு 100 தொழிற்சங்க அங்கத்தவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்

மத்திய வங்கி சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ள மத்திய வங்கி ஊழியர் சங்க பிரபல போராளி யொருவரான டி.என். நிகிஸானுக்கு சேறடிக்கும் ஆத்திரமூட்டல் அறிக்கையை நவ சமசமாஜ 'ஹரய' பத்திரிகையில் வெளியிட்டதற்கு தமது எதிர்ப்பை தெரிவிக்கும் கடிதமொன்றை ம. வ.ஊ. சங்க ங்அகத்தவர் 100 பேர் நவ சமசமாஜ பிரதான செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்னவிற்கு அனுப்பியுள்ளனர்.

நிகிஸானை நிபந்தனையற்று சேவையில் மீண்டும் அமர்த்தும் பிரசாரம் செய்யும் 100 அங்கத்தவர்கள் கையெழுத்திட்ட கடிதம் பின்வருமாறு

(கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன,
பிரதான செயலாளர்,
நவ சமசமாஜ கட்சி
கொழும்பு 2.

தோழர்,

மத்திய வங்கி ஊழியர் சங்க பிரதம போராளியான டி. என். நிகிஸான் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்தியகுழு உறுப்பினராக விளங்கி அவரது அரசியல் கருத்துக்களினால் முதலாளித்துவ அரசின் தாக்குதலுக்கு எதிராக மத்திய வங்கி ஊழியர் சங்கத்தை முன்நின்று நடத்த போராட்டத்தினால் 1985 மே 31ம் திகதியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்பதை நீர் அறிவீர்

இங்ஙனம் வேலை நீக்கப்பட்டமைக்கு, தோழர் டீ.என். நிகிஸான் ஆறுவது அரசியலமைப்பு சட்ட திருத்தத்திற்கும் யூ.என்.பி. அரசாங்கத்திற்கும் எதிராக தீர்மானம் கொண்டு வந்ததும், மத்திய வங்கி பாதுகாப்பிற்கு மிரட்டலாயிருப்பதாக முறைப்பாடு கிடைத்ததுமே காரணமாகுமென மத்திய வங்கி அதிபர், உமது கட்சியின் அங்கத்தவரான சே.து. கருணாரத்ன உட்பட்ட தொழிற்சங்க அங்கத்தவரிடம் தெரிவித்துள்ளார்.

தோழர் டி. என். நிகிஸானை நிபந்தனையற்று சேவைக்கமர்த்தல் மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஒரு பிரதான கோரிக்கையாக அங்கத்தவரால் நிறைவேற்றப்பட்டுள்ளது. அவரை நிபந்தனையற்று மீண்டும் சேவையில் நிறுவும் பொருட்டு வேலை நிறுத்த செயல் திட்டத்திற்கு எழுமாறு அங்கத்தவர் குழுவொன்று பிரசாரம் தொடுத்துள்ளது.

தோழர் நிகிஸானை வேலை நீக்குவதற்கு காரணமான அரசியல் காரணம் தொழிலாள வர்க்கத்திற்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் மிக தாக்கமான காரணமாயிருக்கையில் அந்த அரசியல் வேட்டையினை தோற்கடிக்க சகல தொழிற்சங்கங்களின் சக்தியை ஒருங்கு திரட்ட வேண்டியதாயிருக்கையில் அது பற்றி ஒரு வார்த்தை தன்னும் எழுதாத உமது 'ஹரய' பத்திரிகையில் செத்தெம்பர் 7ம் தேதி இதழில் ''நிகிஸான் தனிப்பட்ட தொழில் நிமித்தம் சென்றுள்ள'' கட்டுக்கதையொன்று பிரசுரமாயுள்ளது. அவர் வேறு தொழிலுக்காக சென்றுள்ளதால், மத்திய வங்கியில் சேவை வழங்கும் பிரச்சனை எழாது என்று அதிபர் கூறியுள்ளதாயும் அப்பத்திரிகை தெரிவிக்கிறது. மத்திய வங்கி தலைவருடன் சுகதுக்க கதையிலீடுபட்டு உமது பத்திரிகைக்கு தகவல் வழங்கியவர் யார் என அறிய நாம் விரும்புகிறோம். அத்துடன் சுகதுக்கம்பற்றி பிரசுரிக்கும் உமது பத்திரிகை டி. என். நிகிஸானை வேலை நீக்கியமைக்கான உண்மை விபரத்தை ஏன் தெரிவிக்கவில்லை என அறியவும் நாம் விரும்புகிறோம்.

உமது கட்சியின் அங்கத்தவரான எமது சங்க செயலாளராயுள்ள சே.து. கருணாரத்னவும், உமது 'ஹரய' பத்திரிகையை முற்போக்கானது என கூறும் எம்.பி.டி. சில்வாவும், நிகிஸானை நிபந்தனையற்று வேலைக்கமர்த்துவதில் எதிர்ப்பாயிருக்கும் நிலைமையில் நிகிஸான் பற்றிய அறிக்கையை 'ஹரய' பத்திரிகையில் வெளியிட்டது மிக ஆத்திரமூட்டல் செயலாகுமென்று குறிப்பிடும் நாம் அதற்கு எமது எதிர்ப்பை இங்கு தெரிவிக்கிறோம்.)

# சீ-நோர் தொழிலாளர்களின் தொழில் உரிமையை காக்கப் போராடு!

சமீபத்தில் அரசினால் கையேற்றப்பட்ட காரைநகர் சீ-நோர் தொழிற்சாலை எக்கணத்திலும் இழுத்து மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. 1980ம் ஆண்டில் 400க்கும் அதிகமானோருக்கு வேலை வழங்கிய இப்பக்டரியில் தொழிலாளரின் எண்ணிக்கை இன்று 17 ஆக வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளது.

சீ-நோர் மீன்பிடிப்படகுகளுக்கான கேள்வி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகரித்துள்ள நிலையில் பக்டரியின் இன்றைய நிலை சீ-நோர் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி, 1967ம் ஆண்டில் இருந்து சீ-நோர் திட்டத்தின் கீழ் தொழில், சமூக சேவை வாய்ப்புக்களைப்பெற்ற மக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெருமளவிலான வங்கிக் கடன்களை அடைக்க முடியாமல் நிர்வாகம் திண்டாடுகின்றது. இலங்கை மின்சார சபைக்கு ரூபா 8 இலட்சம் பாக்கி உள்ளது. இதனைச் சாட்டாக வைத்து பக்டரிக்கு மின்சாரம் நிறுத்தப்பட்டு ஏறக்குறைய அரை வருடம் ஆகின்றது. அத்தோடு நிர்வாகம் பக்டரி உற்பத்திப் பொருட்களை வாடிக்கையாளரின் வங்கி கடன் மேலெல்லையும் தாண்டி கடனுக்கு விற்பனை செய்துள்ளது. இதனால் அவற்றை அறவட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

## உற்பத்தி ஸ்தம்பிதம்

சீ-நோர் தலைமைக்காரியாலயத்தில் இருந்து காரைநகர் பக்டரிக்கு கிடைக்க வேண்டிய 12 இலட்சம் ரூபாவை நிர்வாகம், எதேச்சாதிகாரமான முறையில் குருநகர் பக்டரிக்கு மாற்றியுள்ளது. இதனால் உற்பத்தி ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது சீ-நோர் (கொழும்பு) தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றுள்ளதாக பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட பெரும் மோசடி நடவடிக்கைகளுடன் கைகோர்த்தபடியே இவை இடம்பெறுவதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

தொழிலாளர்களுக்கான வாழ்க்கைச் செலவு உயர்வு அலவன்ஸ் போன்றவை பல மாதங்களாகச் செலுத்தப்படவில்லை. பக்டரியில் வேலை செய்யும் அனைவருக்கும் தேநீர் வழங்கும்படி தலைமைக்காரியாலயத்தில் இருந்து நீண்டகாலத்துக்கு முன் கிடைத்த கட்டளையை தொழிலாளர்களின் போராட்டத்தின் பின்னர் சமீபத்திலேயே நிர்வாகம் அமுல் செய்துள்ளது.

1980ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் மீன்பிடி அமைச்சின் அன்றைய செயலாளர் அநுரா வீரரத்ன தலைமையில் ஆரம்பமான சீ-நோர் 'மூடுவிழா' திட்டம் அரசின் கையேற்புடன் உச்ச நிலையை அடைந்துள்ளது.

சீ-நோர் திட்டம், முக்கியமாக காரைநகரில் பின்தங்கிய பகுதிகளான தோப்புக்காடு, பனுகாடு முதலிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு கைகொடுக்கவென நோர்வே அரசின் உதவியுடன் 1967ல் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இவ்வலயம் தொழிலின்மை, பட்டினி, ஒடுக்குமுறை கொண்ட இராணுவ வலயமாக மாற்றப்பட்டுள்ளது பக்டரியைச் சூழ்ந்த பகுதிகளில் வாழ்ந்த ஏழை மக்கள் சீ-நோர் திட்டத்தின் பயனகளை இழந்ததுமன்றி, தமது பாரம்பரிய வதிவிடங்களை விட்டு அகதிகளாக வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது

## மௌனம்

இவை அத்தனையும் இலங்கை வாத்தக ஊழியர் சங்கம், இலங்கை பொறியியல் தொழிலாளர் சங்கத் தலைமைகளின் பூரண மௌனத்தின் பின்னணியிலேயே இடம் பெறுகின்றன. இத்தலைமைகளின் எதிர்ப்புரட்சி மௌனத்தைச் சாட்டாகக் கொண்டு, நிர்வாகம் 'பக்டரி' அங்கு இடம் பெற்ற கொள்ளைகளாலேயே மூடப்படப் பட்டுவருவதாகக் காட்டும் மோசடிகளிலும் இறங்கியுள்ளது. சீ-நோர் பக்டரியை காக்கும் போராட்டம், குருநகர் – காரைநகர் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி, பரந்தன், காக்கேசன்துறை இரசாயன, சீமெந்து தொழிற்சாலை தொழிலாளர்களின் தொழில் உரிமையையும் காக்கும் போராட்டமாகும்.

## இ. வ. ஊ. சங்க அமைப்பாளர்

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

திருந்ததாக கூற வேறொரு அமைப்பாளர் அதனை ஏற்கவில்லை என்றும் கூறினர்.

சில வங்கி கிளைகளுக்கு விசயம் செய்த மாவட்ட அமைச்சர்களுடன் வாதிட்ட அங்கத்தவருடன் பதிலளிக்க முடியாதுபோயிற்று என்றும் அமைப்பாளர் தெரிவித்தனர்.

''அமைச்சர்களதும் பிரதிநிதிகளதும் சம்பளங்களை அதிகரிக்க முடியுமாயின் நாம் சம்பள உயர்வை கோரி பிரசாரம் செய்வதில் தவறென்ன ?'' என்று சில அங்கத்தவர்கள் அமைச்சர்களை கேட்டுள்ளனர்.

தலைவர் பீ. பண்டாரவின் இடையிட்ட தலையிட்டு மத்தியில் பேசிய எல்.டபிளியூ.எல். அல்விஸ் என்ற சங்க தலைவர் ரொருவர் யூ.என்.பி. அரசாங்கத்துடனும் அரசுடனும் மோதுவதை தவிர்க்கும் இந்த வேலை திட்டத்தின் பின்னால் எதிர்ப்பு நடவடிக்கையும் நிறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

90 நாள் நிபந்தனையின் பேரில் பெற்று உறுதி பெற்ற சங்கம் வேலைத்திட்டத்தை கைவிட்டுள்ளதை அவர் தெளிவாக்கி காட்டினார்.

நிபந்தனையற்று 17 தொழிற்சங்க தலைவரையும் மீண்டும் சேவையில் நிறுவும் வேலை நிறுத்தத்தை தொடுத்து அப்போராட்டத்தூடாக தொழிற்சங்கத்திடமிருந்து பறித்த அடிப்படை சனநாயக உரிமையை மீண்டும் வென்றெடுக்கும் போராட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அல்விஸ் எடுத்துரைத்தார்.

வேலை நிறுத்தத்தை அமைக்க ஒருங்கிணையுமாறு அவர் அமைப்பாளரை கேட்டுக்கொண்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொழும்பு வளாக மாணவர் :

# மாணவர் மத்திய நிலையத்தில் உள்ளமர்ந்து போராட்டம்

**அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் கொழும்பு பல்கலை கழகவளாகத்தின் தலையீட்டுடன் 12ம் திகதி கொழும்பு பல்கலைகழகவளாக மாணவர், மாணவர் மத்திய நிலயத்தில் உள்ளமாந்து கொள்ளும் போராட்டத்தை ஆரம்பித்தனர்.**



கொழும்பு பல்கலைகழக வளாகத்தின் மாணவர் மத்திய நிலயத்தில் உள்ளமர்ந்துகொள்ளும் போராட்டத்தில் பொலிஸார் தலையிடுதல்

நான்கு முக்கிய கோரிக்கைகள் அடிப்படையில் மாணவ [illegible] நடவடிக்கையாகவே இது எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக்கழக மாணவரிடமிருந்து பறிக்கப்பட்ட அக்குவைனஸ் விடுதியை மீண்டும் பெறுதல மகாபொல மாணவர் சலுகை பறிக்கப்படல் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தல் மாணவி, பிக்கு விடுதிகளுக்கு வசதி வழங்குதல், வைத்திய, ஆயுர்வேத பீட மாணவருக்கு விடுதி வசதியை பறித்துவிடும் சதியை தோற்கடித்தல் என்னும் கோரிக்கைகளின் பேரில் இப்போராட்டம் தொடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைகழகத்தை சேர்ந்த சகல இடதுசாரி மாணவ அமைப்புகளும் இப்போராட்டத்திற்கு ஆதரவளித்தன.

12ம் திகதி சிறிது நேரம் பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவினை முற்றுகையிட்ட மாணவர்கள் ஊர்வலமாக சுலோகமெழுப்பி சென்றுள்ளதுடன் மாணவ மத்திய நிலயத்தி உள்ளமர்ந்து கொண்டனர்; தல்போது அவ்வ ஒரு பிரிவு மாணவர் விடுதியாக மாறியுள்ளது.

13ம் திகதி மதியம் போராட்டத்தையும் நடத்தி பிரசார கூட்டத்தில் பேசிய மாணவர் தலைவர்கள் இப்போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக கூறினர்.

பல்கலைக்கழக மாணவருக்கு ல் விடுதி வசதியை ஒழிப்பது அரசாங்கத்தின் சதியாகும். சில வினைத்தை, வெட்டுதல் கல்வியை உயர் மட்டத்தினருக்கு மட்டும் கிடைக்க செய்தல், அக்விைனஸ் விடுதியை கைப்பற்றுதல் என்பன இதன் இலக்காகும். இதற்கெதிராக எழுந்த போராட்டத்தை சமாளிக்க முடியாது அரசாங்கம் தற்காலிகமாக விடுதியை மாணவருக்கு திருப்பியளித்தது.

இதற்கெதிராக மாணவர் அந்த விடுதியில் உள்ளமர்ந்து கொள்ளும் போராட்டத்தை தொடுத்தனர். இப்போராட்டத்திற்கு அரச அடக்குமுறையை தொடுத்ததுடன் மாணவர் தலைவர் நிறுத்தினர்.

தற்போது மீண்டும் புதிய வகையில் தொடுத்துள்ள போராட்டத்தில் 28ம் தேதி சொலிஸ் ஹவுஸ் என்ற நிர்வாக பிரிவினை கைது செய்து கொண்டனர். மாணவரது போராட்டத்திற்கு தொழிலாளவர்க்கத்தின் ஆதரவையும் வென்றெடுக்கும் தேவை இப்போது மிக அவசியமாகும்.

## இடதுசாகளை வேட்டையர்டல் பரவுகின்றது

பிரதேச ரீதியில் இடதுசாரிகளை வேட்டையாடும் தீவிரமான இயக்கமொன்று யூ.என்.பி. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

பொதுநலவாய நாடுகளமைப்பு என்ற பிரசித்தியற்ற பிற்போக்கு அரச தலைவர்கள் கூட்டுக்கு சென்ற சனுதிபதி சயவர்தன பீதியுற்றுள்ள அரச தலைவர்களை மார்க்ஸிய பயங்கரவாதிகளுக்கெதிராககிளப்பி அணிதிரட்டுவதாக ஆரம்பித்த பிரசார முயற்சியின்பின் இந்த இடதுசாரிகளை வேட்டைமாடுவது தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

மாத்தறையில் சிரிசேன என்ற ஆசிரியரையும் பொலிசார் கைது செய்துள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணியில் தொழிற்சங்க பிரிவின் பிரபலஸ்தராயிருந்த சிரிபால கோன்ககவை கண்ணை கட்டி வாகனமொன்றில் ஏற்றிச் சென்றபின் அவரைப்பற்றி எத்தகவலுமே கிடைக்கவில்லை.

சிலகாலமாக கைது செய்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட இரத்மலானை டபிளியூ. வை. சில்வா மீண்டும் பொலிசாரால் இட்டுச் செல்லப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் பயங்கரவாதம் யூ என்.பி. அரசாங்க மக்கள் விரோத வேலைத்திட்டங்களுடன் ஒருங்கிணைந்த இராணுவ சர்வாதிகார தயாரிப்பின் பிரிவாகும்.

பிரதேசரீதியில் மக்கள் விடுதலை முன்னணி தலைவர்கள் தமது எதிர்பாளர் பற்றி உளவு கொடுத்து இந்த கொடிய அரச வேட்டையின் உதவியாளராக விளங்கு தாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.எனினும் அக்கட்சியில் அதனை கண்டித்தோ, குற்றச்சாட்டை நிராகரிக்கும் அறிக்கையொன்றுமோ வெளியிடப்படவில்லை. இது இடதுசாரி இயக்கத்தின் சம்பிரதாயமொன்றல்ல.

இம்மாதம் 25ம் திகதிவரை முப்பத்தைந்துபேர்வரை இங்ஙனம் அரச வேட்டைக்கு இலக்காகியிருப்பதாக பிரதேச ரீதியில் இடதுசாரிகளின் வேட்டைக்கெதிராக தகவல் கிடைத்துள்ளது.

பொலிஸ் உளவாளரை நசுக்கும் பொருட்டும் அரச வேட்டையை தகர்க்கும் பொருட்டும் தொழிலாள வர்க்க அமைப்புகளையும் இடதுசாரி இயக்கங்களையும் உடனடியாக் அணிதிரட்டப்பட வேண்டும். சகல பிரதேசங்களிலும் மக்கள்சபை பாதுகாப்பு சபைகளை கட்டியெழுப்பி அரச அடக்குமுறையை தூக்கியெறிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஹட்டன்: கைது செய்தல்களை எதிர்த்து தொழிலாளர் மணவார் பகிஷ்கரிப்பு

பொலிசாரினுல் கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்யக்கோரி ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி மாணவர்கள் கடந்த நவம்பர் 15ம் திகதி வகுப்புக்களை பகிஷ்கரித்தனர். பாடசாலை செல்லும் மாணவர்களுக்குப் போதிய பாதுகாப்பு அவசியம் என்பதும் அவர்களின் போராட்டத்தின் மற்றுமோர் கோரிக்கையாக இருந்தது.

இந்தப் பகிஷ்கரிப்புக்குச் சில தினங்களுக்கு முன்னர் ஹட்டன் பகுதியில் பல இளைஞர்கள் தேசிய உளவுப் படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் மூவர் ஹைலன்ட்ஸ் கல்லூரி மாணவர்கள். இந்தப் பகிஷ்கரிப்பில் மேற்படி கல்லூரியை சேர்ந்த 2000க்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

நவம்பர் 7ம் திகதி இப்பிரதேசத்தைச் சேர்ந்த 20,000 தொழிலாளர்கள் கைது செய்யும் நடவடிக்கைகளை நிறுத்தும்படியும், கைதானவர்களை உடன் விடுதலை செய்யும் படியும் கோரி வேலை நிறுத்தத்தில் குதித்தனர். தொழிற் சங்கத் தலைவர்களின்றியே இவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த வேலை நிறுத்தத்தால் நெருக்கடிக்குள்ளான இலங்கை தொழிலாளர் காங்கிரசின் யூ.என்.பி. கைக்கூலி தலைவர்கள், இந்த வேலை நிறுத்தங்கள் தமது அங்கீகாரத்துடன் இடம் பெற்றவை அல்ல எனக் கூறிக்கொண்டனர்.

கொழும்பு–10, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால்
கரமம ஹய்லெவல் ரோட், இலக்கம் 244-6, பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்